# உதயதாரகை—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at two shillings a year, payable in advance.*

அம் புத்தகம். சஞ்சிகை ய.] ௲அ௱சஅ ௵. வைகா. ௴. உரு தேதி வியாழக்கிழமை Thursday, May 25, 1848. |Vol. VIII. No. 10.

**TERMS OF THE PAPER.**

For each copy—*two shillings a year*—PAYABLE IN ADVANCE.

To *Subscribers who receive the Paper by mail*, each copy, *inclusive of postage—four shillings a year*.

The difficulty of remitting small sums from distant places may be obviated by *five subscribers' uniting their subscriptions and remitting them together in a single pound note.*

The names of Subscribers will be published; and *all receipts of money* will be regularly acknowledged on the last page of the Paper.

*Subscribers on the Continent* may receive the paper at *four shillings a year*; their papers having to be sent by mail, and a postage of *one penny*, being *prepaid* on each. This is exclusive of Continental postage.

Agents are requested to receive no subscriptions except in conformity with the above terms.

Advertisements will be inserted as heretofore at the rate of *one penny and a half* each line, reckoning the type at Brevier size or seven and a half lines to an inch.

*All Notices of Deaths and Marriages will be chargeable as Advertisements.*

Communications should be *post paid* to receive attention.

POINT PEDRO—Mr. G. H. Hallock.
JAFFNA—The Missionaries.
TRINCOMALIE—Rev. J. Walton.
COLOMBO—Messrs P. B. Fernando and Son.
KANDY—Mr. L. Lawton.
BATTICALOE—Rev. J. Gillings.
MADURA—Rev. C. F. Muzzy.
DINDIGUL—Rev. J. Rendall.
MADRAS—P. R. Hunt, Esq.

## நாற்சமயகோளரி.

இனி தத்துவ ஞானி திரிமூர்த்திகள் சென்மித்த விங்தையை வாலக்காண்டவிருத்தத்தில்க்காண்க.

ஆகாயபராபரமொன்றண்டமூன்று அதிற்பிறந்த அயனுடனே அழலார்தோன்றி மாகாயமாலுடனே உமையாள்தோன்றி மாதுவென்வனச்சிவனுடனே வாணிதோன்றி பாகாயமொழிமாது அயனுக்கானள் பங்கையத்தாளணிபாவைமாலுக்கானள் சீகாஞ்சிபுரத்துமையுஞ் சிவனுக்கானள் சிவனண்டம்படைத்தருளுஞ் செய்கைதானே.

என்பதில் முன்சொல்லிக்கொண்டுவந்தது வெவ்வேறேவிதமாயிருந்தாலும் இது அதிலும் விந்தையாயிருக்கின்றது பராபரன் மூன்று அண்டத்தை உண்டாக்கினரென்றும் அதிலொரு அண்டத்தில் பிரமாவும் இலட்சிமியும் ஒருதாய் பிள்ளைகளென்றும், ஒரு அண்டத்தில் விஷடுணுவும் பார்பதியும் ஒருதாய் பிள்ளைகளென்றும, மற்ருெரு அண்டத்திற் சிவனுஞ் சரசுபதியும் ஒருதாய்பிள்ளைகளென்றும் அப்படியே சிவனுடனே கூடப்பிறந்த சரசுபதி விறுமாவுக்குப் பெண்சாதியாகவும் விறுமாவோடேகூடப்பிறந்த இலட்சிமி விஷடுணுவுக்குப் பெண்சாதியாகவும் விஷடுணுவோடே கூடப்பிறந்த பார்பதி சிவனுக்குப்பெண்சாதியாகவும் வரிசை தப்பாமற் கட்டிக்கொண்டார்கள். இதை நீங்கள் சீர்தூக்கிப் பார்ப்பீர்களானல் இவர்கள் தானயிருக்கிற பராபரனென்று சொல்லக்கூடுமா? இப்படிச்சொல்லுகிறதற்கும் நினைக்கிறதற்கும் பரிச்சேதமிடமில்லை. இபபவும் இவைகளெல்லாரும் பராபர வஸ்துவினுடைய வேதவாக்கியங்களை அறிய ஞானக்கண்ணில்லாதபடியினலே பலகுருடர் ஆனை கண்ட கதை போல தங்களுக்குத்தோன்றினபடி புராணங்களை எழுதிவைத்தார்கள். இம்மூன்றுபேருடைய முறையையும் புத்திமான்கள் சிந்தித்துப்பார்த்தால் விசிதமாய்த் தெரியவரலாம் சிவன் படைத்தானென்று இதில் உயர்த்தியாகச் சொல்லுகிருர்கள். இராமன் தன்பேர் நிலைக்கப்போட்டது. அகர வரியிலே அரியென்று தன் பேரை முன்னேபோட்டு சிவனைப் பிறகாலே காண்பித்திருக்கிருன். இவர்கள் சனியனலே கெட்டபேர்களென்றுஞ் சனியனைச் சுவாமியென்றுஞ் சொல்லுகிருர்கள்.

பேரின்பமாலை விருத்தம்.

மூவரையுஞ்சனியென்ருன்பிடித்தலாலேமுதலொருவன் தலையிழந்தான் முக்கணுள்ளோன் சாவுவருமெனமுனிவன்தனக்குமஞ்சிதாஞெளித்தானவேலிதன்னிலேதான் பாவியென்றதிருமாலோர் பெண்ணினலே பதியிழந்து பாரியுடன் வனத்திற் சென்ருன் தேவனென்றே இவர்கள்தம்மை வணங்கினலுந்திறமையுள்ள கதியருளுந்தேவனுமோ.

வேலவனை வேங்கைமரமாக்கிவைத்தாய் விறகெடுத்து சொக்கர்தன்னை விற்கவைத்தாய் மாலவனை உரலோடே கட்டிவைத்தாய் வள்ளிதன்னைக்குறவருடவனத்திற்சேர்த்தாய் காலனை மார்க்கண்டனுக்காய் அரனுதைத்த காரணனைநீபிடித்த கற்மத்தாலே சாலவனே உன்னைத்தொழுதேன் என்னைத்தொடாதே சனியனே காகமேறுந்தம்பிரானே.

என்று இந்தத் திரிமூர்த்திகள் சனியனலேகெட்டபேர்களென்றும் அச்சனியன் இவர்களைப் பிடித்துக்கொண்டிருக்கிறதென்றும் அது இவர்களை விட்டுப்போகிறதெப்போவென்றும் அது நீங்குகிறதுதானெப்படி? இவர்களை விட்டு நீங்கவில்லையென்றபோது உலகத்திலிருக்கிற மனிதர்களுடைய தீவினையை விலக்குகிறதற்கு காரணம் எப்படிச் சொல்லுவீர்களாக. மேலும் இந்து சமயத்திற் சொல்வதென்னவெனில், பசு பலவர்ணங்களாயிருந்தாலும் பால் ஒன்றுபோலவும், ஒரு ஊருக்குப் பல வழிபோய்ச் சேரலாம்போலவும் பொன் ஒன்று பணதி பலபல விதம்போலவும் பராபர வஸ்து பலபல தெய்வ அவதாரங்களை எடுத்திருக்கிருரென்கிறபடியினலேயும் அவர் தூணிலுந் துரும்பிலும் இருக்கிருரென்றும் அப்படிப்பட்ட தேவர்களையும் வணங்கினலெல்லாம் அவருக்குச் சேருமேயொழிய மற்றப்படி வேருெருதர்க்கும் செல்லாதென்று சொல்வது சரியல்ல. அதெவ்வாறென்ருல், முதலாவதுபசுபலபலவர்ணங்களாயிருந்தாலும் பாலெல்லாம் பசுவின் பால்தானே. ஆனல் நாய், நரி, பன்றிப்பாலும்பசுவின்பாலாமோ?

உவது. பேரின்பமாலைவிருத்தம்.

பலவழிபோய் ஒரு ஊரிற் கூடினலும் பலன் தருவோன் ஒருவனல்லால்பலபேருண்டோவுலகோரே யோவ்வொருதன்பதம்வெவ்வேறென்று உரைப்பதேன்ன மதியில்லாருரைத்தாப்போலே சிலபேர்கள் சிவபதமே விரும்புமத்தோர்சிவனேதுவைகுண்டத்திருப்பதாமென் றிலவதனைக் காத்த கிள்ளைபோலென்ணிவெண்ணியிருந்துநரகெய்துவாரே. இதை யோசனைபண்ணிப்பார்க்கிறதுமன்றி,

௬ம் கவி.

பொன்ஞென்று பணதிபலபலவென்போரே பொதுமகளைக்குலமகளுக்கொப்பிடவும்போமோ மன்னவர்களிருக்குமரசாட்சிதன்னில் மதியில்லார்தம்மை வைத்து வணங்குவார்போல் தன்னிகரில்லாத சருவேசன்தன்னைத்தான் வணங்காதெரிநரகில்தவிக்கும்பேயை உன்னியுன்னி பல மதங்கள் துதித்துநிற்குமொருவனென்றே நரகில்விழுந்துழலுவாரே.

என்பதில் பொன்ஞென்றேயானல் பணதிகளும் மாத்துகளுஞ் சரியாயிருக்கவேண்டுமே. பொன்னைப்போலேபித்தளையும் சரியாமோ! பத்தினியும்வேசியுஞ் சரியாமோ? மகா ஞானமுடைத்தான இராசாதிராசா இருக்கப்பட்ட சிங்காசனத்திலே பயித்தியக்காரனை வைத்து வணங்கலாமோ! பரபரனுக்குவதிலாகப் பசாசை வணங்கலாமோ? இது புத்தியுள்ள காரியமாதுமோ? யோசினைபண்ணிப்பாருங்கள். சிவன் அக்கினி சுரூபமாய் இருந்தாரென்றும் விஷடுணு பன்றி அவதாரமெடுத்து பாதங்காணுமல்ப்போனரென்றும் பிரமா அன்னபட்சியாய்பறந்து சிரசுகாணமல் போனரென்றும் பின்னையும் மாணிக்கவாசகர் சொன்ன கவி. இன்னும்வரும்.

---

[Continuation of medical Recipes.]

அகத்தீசுபரர் அருளிச்செய்தது—பஞ்ச பூதியச்சாக்கின விபரம்.

அரிதாரம் பிறுதுவியின்கூறதாகும் ஆனதொருசவ்விரமப்புவாதும்—பெரிதானகெவுரியது தேயுவாதும் பின்னையொருதுரிசுவேள்ளை வாயுவாதும்—அரிதானலிங்கமதாகாயமாகும் ஒருந்தியே பச்சையுடன் மாட்டலாதுங்—தெரியாதோ வைத்தியரேயென்னுலப்பா சித்தர்க்குச்சொன்னவித்தைசெகத்திற் பாரேன். க.

செகத்திலுள்ள வைத்தியரே சொல்லக்கேளுந் திறமான அரிதாரக்கட்டி வாங்கித்—சுகத்திலே சுண்ணும்புக்குள்ளேவைத்துச் சுகமாகச் சுத்திசெய்தே எடுத்துக்கொண்டு—இகத்திலே மனிதர்களுக்கீளைகாசம் எலிகடிகள் விஷபாகம் பித்தபாண்டு—மகத்தான் குளிர்காய்ச்சல் மருள்கொண்டோடும் வாய்வுபலநோய்களுக்குச் சுக்கில்வையேன். உ.

வைக்கக்கேள் சவ்வீரக்கட்டிதன்னை வளமானசுவாசமொடு சுரநீராம்பல்—விக்கலொடு குன்மமெட்டு இளைப்பு ஈளை மீதுந்ததொரு நெஞ்சடைப்பு மிளகிற்செய்யத்—தொக்காருஞ் சூலையொடு வயிற்றிற்கொண்ட தோராத நீரழிவு நீராமைக்குஞ்—சிக்காதே கொடிவேலிவேர் அரைத்துத்திறமாகவுண்டையதுசெய்யப்போமே. ௩.

போமெடா கெவுரியுடபோக்கைக்கேளு புகழானதோஷமொடு சுரத்துக்கெல்லாங்—தாமேடா சுக்குவட்டத்தண்ணீர்தன்னிற் ருக்கிடவே காசிடைதான்காசம்போதும்—நாமேடாசொல்லு கடிங்கிரந்திமேகம் நயமாகும் வயிற்றுவலி சூலைக்கெல்லாம்—ஓமேடா பனங்கட்டிதன்னிலீயவொருகோடிநோய்களெல்லாம் ஒழிக்கும்பாரேன். ௪.

பாரேன்ன வெள்ளைப்பாஷாணந்தன்னைப் பாங்காக எருக்கலம்பால்கொண்டேயாட்டிச்—சேரென்ன சிறுபயற்றினளவாயுண்டை திறமாகப் பெரியதொருவுளமாந்தைக்குச்—சாரென்ன வேப்பிலைச்சாறதனிற்கொள்ளச் சணத்திலே பெருவயிறு குமிட்டித்தீரும்—வேரென்ன சோகைக்கப்படியேசெய்ய வெதுகாலநோய்களெல்லாம் வெருண்டுபோமே. ௫.

போதுமேலிங்கமொடுசன்னிதோஷம் பொறுக்காத நெஞ்சடைப்புவாயுமூர்ச்சை—தாகமேவயிற்றெரிவுயிரைச்சலுக்குந்தானஞ்சிச் சாற்றிலேதானேதாக்கப்—போதுமேசூலையொடுபித்தபாண்டுயிடமானவயிற்றுவலிகுன்மஞ்சோகை—பாகமாய்க்கொடிவேலிக்கஷாயந்தன்னிற்பறக்குமெடா குன்மமெல்லாங் காந்தி போமே. ௬.

காந்தம்நாலுகெந்திசமன்கரிப்பான்சாறுவிட்டரைத்துப்—போந்தசட்டிதன்னிற்றடவிப்போட்டே மூடியொருசட்டி பாந்தமாகச்சீலைசெய்துபாங்காய்ப்பிடத்திற்போட்டிடவே-பாந்தமாகப்பின்னுமொருவளமாய்ப்பரிவிற்சீலைசெய்யேன். ௭.

செய்யுமுறையைச் சொல்லுகிறேம்சிராய்ச்சிந்துரத்துடனே— வைகேந்திசரிசமனய் வாகாய்ப் பழச்சாற்ருலரைத்து—உய்யும்படியேமுன்போல வொருசட்டிக்குள்ளிட்டதின்மே-லய்யப்படாமற் சீலை செய்தேயன்பாய்ப்புடத்திற்போட்டெடுமேன். ௮.

போட்டேயெடுத்தசிந்தூரம் புசிக்கும்வெண்ணெய்நீரடைப்பு —கீட்டுஞ்சோகைபாண்டுவுடன் நீராம்பலமேல்வயிற்றுவலி—மூட்டித்தேனுந் திரிகடுகு மூன்றுநாளிற்கொடுத்திடுகில்-வாட்டப்படாதேயோடிவிடும் வலமாஞ்சிந்தூரம்மிதுவே. ௯.

சாதிலிங்கம்நாலுடனேசமனயாவாங்கரியு— மாதிவசுவாசமுக்கிராவேரதிலேயுருட்டியாறுதரஞ் – சூதாய்ச்சீலைப்புகையிடவேதுடரும்பறங்கி மேகமெல்லாம்—வாகாய்க்காட்டவோடிவிடும் மசுத்தாஞ்சித்தர் புகையிதுவே. ௰.

எருக்கம்வேரையிழைத்தரைத்துயியல்பாயிலிங்கமதிற்பிசறிப்—பருக்கக்காயவைத்தெடுத்துப் பதமாஞ்சுங்கான்தனிற்குடிக்க—வருத்தமான புண்புரையும் வயிற்றுக்கட்டிதலைக்குத்து-இருக்காதுடனே யோடிவிடுமியல்பாஞ்சித்தர்புகையிதுவே. ௰௧.

ஆவாங்கிரியோர்நாலுயதினுடனிலிங்கம் மூன்று—தேங்குங்குலியமீரண்டு சேரெடாவீரம் மூன்று—தாலியரைத்துச் சுங்கானிற்றடவியேகுடிப்பீராகிற்-போவதுசூலைபுண்கள்பொய்யல்லச்சித்தர்சொன்னர். ௰௨.

ஆலாத்திப்பூரம் நாலு அதினுடன் காந்தமிரண்டு-போலப்பாஷாணமிரண்டு கொடியதோர்கெவுரிரெண்டு—சாலக்கொடுவேலிவேரிரண்டு சவ்வீரந்தானரைகூட்டி-முலப்படியே முன்போல மூடித்துக் காயவைத்தெடுத்தே. ௰௩.

எடுத்த வில்லைநினைவாகவியல்பாய்ப் புளியந்தோல்சுட்டு—வடிப்பமாகத்தான் மூட்டிவைத்தே காவல்தான்செய்து—பொடித்தேபோடவாசனத்திற் பிடிப்பு மூலப்பவுந்திரமும்—தொடுத்த புண்கள் புரைபோகுஞ் சொன்னர் சுங்கான் புகையிதுவே. ௰௪.

தாரமோடிரசங்கெந்தி சரிவரத்தூளேசெய்து—பாரமாஞ்சீலைதன்னிற் பரப்பியே திரியுருட்டி—வீரமாம்விளக்கிற்போட்டு வேப்பெண்ணெய்தன்னைவார்த்துக்—கோரமாந்தீக்கொழுத்திக்கொடும்புகை மூக்கிலேற்றேன். ௰௫.

ஏத்திடச் சன்னிதோஷம் எழுந்திடுங் குட்டரோகம்—பார்த்திடிற்பறங்கிசூலை பௌந்திரம் முதலாயுள்ள—போர்த்தீடத்தீருமென்று பொருப்பின்மேலிருந்துகொண்டு—சாத்திரமுறைதப்பாமற் தவமுனிசொன்னதன்றே ௰௬.

ஏத்திடச்சன்னிதீரும் எழும்பிய குட்டந்தீரும்—பார்த்திடிற் பறங்கிதீரும் பார்வைசூனியமுந்தீரும்—போர்த்திடுங்கண்டமாலை குன்மங்கள்முதலாய்ப்போகும்—ஏத்திடும் வியாதிக்கெல்லாம் ஏழுநாட்பத்தியமாமே. ௰௭.

இப்படிக்கு, மா. முத்துக்குமாரு

தாரகையே,

இகபரமிரண்டற்கும் உறுதி பயக்கும் ஆத்மிக விஷயங்களிலே சிந்தனை வைப்பதும் தேவ தியானங்களிலே சிரதனை செய்வதும் உலக ஞானத்தினுங் கடவுள் ஞானத்தையே நாடுவதும் நிரந்தரம் நன்னெறியில் ஒழுகுவதுமேவிவேகாசாரசீவியாகிய மனுஷனுக்கு அமைந்த நடையென எவரும் ஒப்புக்கொள்வார்போலே ஆயினும் இவ்வகையான சிந்தனை சாதனைமுதலியன உலகத்திலுள்ள பலபேதமான சமய நூல்கள் அனைத்திலும் நியாய விரோத விபரீதமற யதார்த்தமாய் விளங்கியிருக்கும் என அறுதியிடில், ஒன்றற்கொன்று ஒவ்வா எச்சமயநூல்களுங் கடவுள் நூல்கள் என்று வாதிக்கும் விபரீதயுத்தியாக முடியுமே. நிங்கள வஸ்துவாகிய கடவுள் நிர்விகாரியாதலால், தமது சித்தம் பிரமாணம் நோக்கம் முதலியவற்றை உணர்த்தும் ஒருநூலையே மனுஷருக்கு அனுக்கிரசிப்பார் அன்றி நாநாபேத நூதனமான நூல்களை அநுக்கிரகிப்பார் என்று சொல்லில் இலட்சண பின்னம் குணபங்கம் என்னுந் தோனிப்புக்கள் கடவுளில் விளையுமே. உலக நிலையினும் இயற்கையிலும் அநுபவப்பட்டிறந்து புத்திபூருவமாய் யுத்திக்கும் எவருங் கடவுள் நூல் உலகிலே ஒன்று மாத்திரம் இருக்குமெனக்காண்பரே. இப்பட்சம் ஒன்றற்கு உடம்படா எவருடனேயும் யுத்திப்பது விருதா. சைவமத விற்பன்னரே, உங்கள் நிலையைப் பார்க்கும்போது நீங்கள் சைவமத பட்சவாதிகளெனத்தோன்றுகின்றது. நல்லதும் உலகிலுள்ள சமயம் பலவற்றுள்ளுஞ் சைவங் கடவுள் நூல் என்று யாதினாலே வாதிக்கின்றீர்? விளங்க அரிய சூட்சாநுசூட்சங்கள் அதிலிருக்கின்றனவென்று நீவிர் கற்பித்துக்கொண்டதினாலேயா? மக்கள் எவர்க்கும் ஆத்மிகவிஷயத்திலே சாதாரணமாயிருக்குங் கடவுள் நூல் ஒளியார் வெளியார் எவர்க்கும் ஒப்ப விளங்கும் பொருள் உடைய நூலாயல்லவா இருக்கும்? அன்றி நியாயான்னியமான பொருட்டுறைகளை அரிதுணர் பொருளவாந்திரிசொற்களில் மயங்க மயங்குவதும் செம் பொருட் சிதைவாக்குவதும் கடவுணூற்கு இலட்சணமன்றே, இங்ஙனங்கொண்டபிரதிங்ஞைக்குச் சைவவேதாகமங்களிலே பலதிருட்டாந்தங் காணலாம். உற்பத்திக்கிரமத்திலே, "பிரம்மத்தில் ஆரோபிதமாகரச்சுவிற் சர்ப்பத்துவந் தோன்றினாற்போல மூலப்பிரகிருதியென்னும் ஒரு சத்திதோன்றும்" என்கிறீரே. இதில் எடுத்துக்கொண்ட சபட்சத்து ரச்சுவுக்கன்னியமான அறிவுப்பொருள் ஒன்று சர்ப்பாகிருதியைமானதக்காட்சியினுடையதாய்த் தனக் கெதிரேதென்றும் ரச்சுவைவிவர்த்தக்காட்சியாக ஆகிருதியாற் சர்ப்பம் என விபரீதித்ததென விளங்குகின்றதே. "பிரமத்தில் ஆரோபிதமாக மூலப்பிரகிருதிதோன்றும்" என்ற பட்சத்திலேயோ மூலப் பிரகிருதியை மானதக்காட்சியிலுடையதாய் பிரம்மதத்தை மூலப்பிரகிருதியாக விபரீதிக்கும் பிரம்மான்னியமான அறிவுப்பொருள் ஒன்று கண்டிலமே அன்ன அறிவுப்பொருள் பிரம்மம் எனில் நியாய விரோதமும் சீவன் என்னிலோ வேத விரோதமுமாம் பிரம்மாமிசமான ஆன்மா என்னிலும் சித்துப்பொருள் இலட்சணத்தாலே அன்ன அமிசம் பிரம்மமாய் நியாய விரோதமேயாம். எவ்வாறு விரோதமெனில், சுத்தசைதன்னியமானபிரம்மத்திற்தத் தன்னை மூலப்பிரகிருதியாக விபரீதிக்கும் விவர்த்தக் காட்சியுண்டாகாதே. ஏதோ ஒருவகையாய் உண்டாய்விட்டுது என்னினும் அஞ்ஞானங் காரணமாய் உண்டானதென்றே முடியும்; மேலும் பலவியதிரேகங்களும் முடியும், அன்றி மூலப்பிரகிருதியின் முக்குணங்களுள் ஒன்ருய் அவித்தையிற்றோன்றிய சீவன்தான். "அன்ன அறிவுப் பொருள்" என்னில் மகன் வைக்கோல்புரியைவிவாத்தக் காட்சியாற் சற்பமெனக்கொண்டு அங்ஙனங் கொண்டவிபரீதக்காட்சியாகிய தந்தைகாரணமாய் உற்பத்தியானன் என்றாற்போல விகடமாம். மதவிற்பன்னரே சமயசூட்சங்கண்டிரா? சாத்திரநுட்பங் கண்டிரா? இனிச் சாத்திரதிற்கு வேறுபொருள்படைக்கப்போகிறீரா? மேலும் ஒரு திருட்டாந்தம் காட்டுகிறோம். சோதிதானுயிருந்தால் பிரமமதாம். மாயையிலேதோய்ந்தால் ஈசன்காதல் அவித்தையிற் கூடினாற் சீவனும், பிரமாதா காணந்தோய்ந்தால், மேதகு இந்தியஞ்சேர்ந்தாற் பிரமாணம் அறியாத விடையத்தேயதில் யாத்துவேபிரமேயம் அறிவதிற் போந்தாற்பலம் என்கிறீரே. சுத்தசைதன்னியகடவுள் அவித்தையிற்கூடிற் சீவனும்எனிற் கடவுளே சீவனென்றும் அக்கடவுளே அவித்தையாகிய அஞ்ஞான இருளிற் கலந்தாரென்றும் விளங்குகின்றது. மற்றும் விகடங்களைச் சொல்லிற் பெருகும். பின்னை சர்வம் பிரமம் என்றே தொனிக்கின்றது. சமய விற்பன்னரே, கடவுள் காரணமாய்த்தோன்றிய அன்னிய காரியப்பொருட்குங் கடவுளே பிறிதொன்றுன பொருட்கும் உள்ள வேற்றுமையைக் கண்டறியுங்கள். சகத்துற்பத்தியைப்பலநூலினுங் கண்டவாறுசொல எண்ணியும் சொல்வதாற் பெரும் பயனின்று என நினைக்கிறேம். 'கருதுகாரணம் உண்டாக்க காரியமுள்ளதாகிவருவதால் அநாதிவையம் மற்றொரு கடவுள் இத்தைத் தருதலால் ஆதியென்று சாற்றலுமாகும்" என்றதனால் நூலை அநுக்கிரகித்த கடவுளுக்குங் கூடச்சகத்து அநாதியோ ஆதியோ என்று நிண்ணயஞ் செய்யத்தெரியாத சங்கை உண்டுபோலே. கடவுள் உலகஞானிகளை அவர்கள் தந்திரத்திலேயே மடிக்கிறார். இன்னும் வரும்.

ஓர் கிறிஸ்தவன்.

---

# உ த ய த ா ர கை.

## ௲௮௱௪௰௬ வைகா. மாதம். உ௫, தேதி.

### யாழ்ப்பாணம்.

சபைவர்த்தனை.—பிறகிட்ட ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டையிற் சாத்திரப்பள்ளிக்கூடத்திற் படிக்கின்ற ஆறுபிள்ளைகள் கிறீஸ்துநாதர்பேரில் விசுவாசிகளாகித் திருச்சபையிற் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்களில் மூன்றுபேருங் கிறீஸ்துமார்க்கப்பிதாமாதாவுடைய பிள்ளைகள்.

### நாய்க் கட்டளைநிருபம்

நாய்கள்விட்டு வீட்டில் வளர்ப்பதைப்பற்றி மந்திராலோசனைச்சங்கத்தார் சம்மதப்படி அதியுத்தம தேசாதிபதியவர்களால் நிருபிக்கப்பட்ட கட்டளைநிருபமாவது,—இலங்கைத்தீவிலே குடியிருக்கின்ற யாதாமொருவன் தன்வீட்டிலே அல்லது தன்தோட்டத்திலே உத்தரவுச்சீட்டில்லாமல் யாதாமொரு நாயை அல்லது நாய்களை விட்டிருந்தால், அல்லது விட்டிருக்க இடங்கொடுத்தால், அவன் குற்றவாளியர்சிப் பத்துச்சிலீங்குக்குமேற்படாத ஒரு அபராதத்திற் கேதுவாயிருப்பான்.

### வெகு சனச்சங்காரம்.

பிறகிட்ட தைமாசமளவில் சாந்துவுச்சு தீவிலுள்ளஇந்தியர் அமேரிக்கன்மிசியோனரிகளிற் சிலரைப் பிடித்துக் கண்டதுண்டமாய்ச் சங்காரம்பண்ணினார்கள். ஏழு பேர் கொல்லப்பட மூன்றுபேர் பாடாய்க் காயப்பட்டார்கள். இதற்குக் காரணம் யாதெனில், இந்தியருக்குள்ளே துன்பமுண்டுபட்டதினால் மிசியோனரிமாரிலொருவராகிய டாக்குத்தர் உக்றமன் என்பவர்போய் அவர்களுக்கு மருந்துகொடுத்துவருகையில், அவர் கொடுத்த மருந்தில் நஞ்சுஞ்சேர்த்துக்கொடுத்துவிட்டாரென்று அவரில் அசுகைகொண்டதினாலே, புத்தி மயக்கமாய்க்கோபங்கொண்டு பாதிரிமாரைப் பிடித்துச் சங்காரம்பண்ணினார்கள்.

### டாக்குத்தர் நேதன் உவாட்.

வெகுவருடக்காலமாக யாழ்ப்பாணத்தில், தேகத்துக்கும் ஆத்துமத்துக்கும் வைத்தியராயிருந்த டாக்குத்தர் உவாட் பாதிரியார் தான் முன்சேர்ந்த அமேரிக்கன் போர்ட் சங்கத்தைவிட்டுநீங்கி, வேமந்து நகரியிலுள்ள வேளிந்றன் என்னும் ஊரிலே தமது சமசாரத்துடன் குடியிருக்கும்படி தீர்மானித்தார்.

### சிவில் உத்தியோக நியமிதம்.

சிறிதுகாலமாய் யாழ்ப்பாணத்து ஏசன்றுத்துரையவர்களுக்கு இரண்டாவதாயிருந்த தெம்பிளர்த்துரையவர்கள் குருநாகல்லுக்கு இரண்டாம் ஏசன்றுத்துரையாகவும் அவரிடம்பராபரிக்க யாழ்ப்பாணத்திற்கு வேலித்துரையும் நிசமிக்கப்பட்டார்கள்.

### கொடுங்கொலை.

இந்தமாதம் யரு தேதி மூளாய்க்குறிச்சியிலே ஒரு மனுஷியை இரண்டு மூன்றுபேர் முற்கோபத்தினாலே ஒருபெண்பிள்ளையைக்கொண்டு ஏதோ உபாயத்தினால் அழைப்பித்து அவளுடைய கழுத்தை முரித்து உடுத்தசீலையையும்உரிந்தெடுத்துக்கொண்டுஅரையிலே கல்லைக்கட்டிக்கிணற்றிலேஎறிந்துபோட்டார்கள். அவளைப்பிடித்துச்சோலிபண்ணும்போதுஅவள் அவர்களைக் கையினாலே விறண்டிக்காயப்படுத்திவிட்டாள். புருஷன் அவளைத் தேடிக்காணுமல் ஒருகிணற்றிலே கிடக்கக்கண்டு பின்பு அவளையெடுத்துப் போலீஸ நீதவான் விளங்கி அவர்களைக் கோட்டையில் மறியற்படுத்திபிருக்கிறார்.

### பாப்புமதவீண்பத்தி.

பிருன்ஸ்தேசத்திலுள்ள கீழ்வகையான கத்தோலிக்கருக்குள் எவ்வளவு ஈனமான வீண்பத்தி நடமாடுகுதென்பதை நீங்கள் அறியும்படிக்குச் சொல்வதென்னவெனில், சேதனமுள்ளமனிதரைச் சொஸ்தமடைவிக்கும்பொருட்டாகவல்ல, அசேதனமுள்ள மிருகங்களைச் சுகப்படுத்தும்பொருட்டே பூசாசாரச்சடங்கை ஆசரிக்கிறார்கள். எப்படியெனில், ஒருகுடியானவனுடைய குதிரை, மாடு, பன்றி துன்பமாதம்பொழுது அவன் தனது குருவானவரிடம்போய், எனதுமிருகந் துன்பமாயிருக்குது. ஆகையால் அதன்பேரில் பூசை வாசியும். தங்களுக்கு இருபதுஇறைசால் கொடுப்போமென்கிறான். வில்சலஸ் என்னும் நகரிக்கருகான ஓர் கிராமத்தில் நோய்கொண்ட குதிரையின்பேரால் வருடத்திற்கொருமுறை மிகவும் பயபத்தியான பூசாசாரங்களைக்கொண்டாடுகிறார்கள். அக்குதிரைகளுஞ் சடங்குவேளைக்கு வரவேண்டியது. குருவானவர் அவைகளின்பேரிற் சாணிக்கை செலுத்துகையில், சனங்கள் அவைகளைக்கோவிற்கதவிற் குக்கிட்ட நிரைக்குவிடுகிறார்கள். பின்னை, பிருன்சுக்காரர் எவ்வளவு ஈனமாய்க் குருமாருக்குச் சிறைகளாகிறார்களென்பதற்கு வேறேசாட்சி வேண்டுமோ?

### தண்ணீர்.

இஸ்பானியருக்குள் ஒருபழமொழியுண்டு. என்னவெனில், தண்ணீர்குடித்தால் ஒருவன் நோயாளியாகிறதுமில்லை. கடனாளியாகிறதுமில்லை. அல்லது அவன் மனைவி அறுதலியாகிறதுமில்லை.

### சலாகைபாவியவீதி.

அமேரிக்காக்கண்டத்து ஐக்கியதேசத்திற் பிறகிட்ட பதினேழுவருடத்திற்குள், யஉ கோடியே இரண்டிலட்சத்து அஞ்ஞூற்றிருபத்தையாயிரத்துத் தொளாயிரத்துமுப்பத்தேழுஇறைசாற்செலவுபண்ணி, ஐயாயிரத்து எழுநூற்றுநாற்பதுமயில் தூரமளவுக்கு இருப்புச் சலாகைபாவியவீதி போடப்பட்டது.

### சீனம்.

சித்திரைமாதம் இருபத்தைந்தாந் தேதியைக்கொண்டு சீனதேசத்தால்வந்த சமாசாரமென்னவெனில்.—கொங்கொங்நகரியில் வெகுகணக்கான மரணங்கள் இடையூறுகள் சம்பவித்தன, ஓர் ஏரோப்பையன் வேட்டைக்குச்சுட்டதுவக்கு சீனனொருவனிற்பட்டதினால் அவன் விழுந்து உடனே காலஞ்சென்றுவிட்டான். இது கைபிழைபாடானகாரியமானதால், அவன் உறவுமுறையாருக்குச் சிறிது வெகுமதி கொடுத்து இதுகாரியத்தை இருதிறத்தாருஞ் சரிக்கட்டிக்கொண்டார்கள். மேலும் வெடிமருந்துச்சாலையில் நெருப்புப்பிடித்து அத்லநின்று வேலைசெய்த நாலுபேரைக் கொன்றுபோட்டது.

காந்தன் நகரியிற் "பீரா" என்னும் இரண்டுபாய் மரக்கப்பல் சித்திரைமாதம் பன்னிரண்டாந்தேதி சமுத்திரத்திற் கீழதுமேலதானதால் அதிலிருந்த மெஸதர் யேமீஸ் என்னும் பேரையுள்ள ஓர் மிசியோனரியும் அவர்பெண்சாதியும் வேறும்பலரும் அமிழ்ந்திப்போனார்கள். இன்னும் சீனதேசத்து வேறொரு இடத்தில் வெகுபேர் கற்களைக்கிண்டிப் புரட்டியெடுத்துக்கொண்டு நிற்கையில், ஒரு பெரிய சுல்லுடைந்து துண்டுகளாய்ப்பறந்து மூன்றுபேரைக் கொன்றுபோட்டது

அமேரிக்காவிலிருந்து பனிக்கட்டியேற்றிவந்த "கேமில்ற்றன்" என்னுங் கப்பல் சித்திரைமாதம் பன்னிரண்டாந்தேதி சீனதேசத்தில் வந்துசேர்ந்தது. காந்தன் நகரியிற் சிறிது சொற்ப கலகங்கள் இங்கிலீசுகாரருக்கு விரோதமாக நடந்தது. இரண்டு துரைமார் தோணியேறிக்கொண்டுபோகையிற் சிறிது சீனர் கூடித் திரண்டுபோய் அவர்களிலொருவனுடைய தலையில் கல்லாலே எறிந்து காயப்படுத்தினார்கள். இப்புரளிகள் செய்ததற்காக அந்தச்சீனரிலிரண்டுபேரைப்பிடித்து விளங்கிக் குற்றவாளிகளாக்கி அவர்களை அடிப்பிக்கும்படி தீர்மானமாயிற்று. இவர்களுடைய தோணிக்காரரும் வேறொருவள்ளம்விட்டோடின கிலாசுகாரரும் ஒருவருக்கொருவர் தொந்தரவுபட்டுக்கொண்டதினால் இந்தக்கலகமுண்டானதற்குக் காரணமாயிருக்கவேண்டும்.

இற்றைக்குச் சிறிதுநாளைக்குமுன் ஒருநாட் பட்டப்பகலில் ஒருவன் சீலையுரிந்தெறிந்துபோட்டு நிருவாணமாய் இங்கிலீசுகாரவியர்பாரிகள் இருந்தஇடத்திற்குவந்து உலாவித்திரிந்தான் இவன் சுத்தபைத்தியகாரனென்று சிலர் சொல்லுகிறார்கள். இவன் சீனரிடத்தில் இரண்டிறைசாற் கைக்கூலி வாங்கிக்கொண்டு இப்படிப்பட்ட அவலட்சணமானகாரியத்தைச் செய்தானென்று சிலர் சொல்லுகிறார்கள். மேற்சொல்லிய கலகக்காரரில் வேறும் பத்துப்பேரைப்பிடித்துவிளங்கி ஆக்கினைசெய்யப்பட்டது.

### இடையூறு.

கற்குத்தாநகரியிலுள்ள ஓர் இராணுவத்துரை ஒருகரடியைச் சுட்டபோது, அதுவெடிபட்டுச் செத்ததுபோற்கிடந்தது. செத்துப்போச்சுதென்று துரை கிட்டப்போய்ப் பார்த்தபொழுது அது பாய்ந்து அவரைக் கீலங்கீலமாகக் கிழித்துப்போட்டது.

# MORNING STAR.

## Jaffna, May 25th, 1848.

### THE MAHOGANY TREE.

In our last No. we published an interesting notice of the *Swietenia Mahogoni*, whose timber is so justly celebrated, as an article of commerce and for its use for cabinet manufacture.

As a useful record in the history of the tree, and as embodying useful and interesting information for many of our readers, we subjoin some further notices with which we have been kindly favored, of the introduction and growth of the tree in India and Ceylon.

Of the character and growth of this tree in Bengal, we find the following notice in a letter from the Superintendent of the Honourable Company's Botanic Garden at Calcutta, inserted in the proceedings of the Madras Agri-Horticultural Society for 1839. Says the writer: "I cannot refrain from observing, in this place, that Mahogany is a much quicker growing tree in this country than Teak, and that its wood is equally good with that from St. Domingo, circumstances which deserve the most serious attention, and recommend the climate as peculiarly suited to the cultivation, on an extensive scale, of that most valuable tree."

When this tree was first introduced into Ceylon is not known. The only tree of this species in other parts of the island, of which we have any information, is that in the Botanic Garden at Paradenia. This is said to be of considerable size, but has not yet produced seed. The tree was first introduced into *this* part of the island in 1842. Young plants were sent to Jaffna in a glass case, on the application, we believe, of the Government Agent, from the Botanic Garden at Calcutta, and arrived here in a healthy state. Soon after their reception, twelve of them were planted out in the Cutchery grounds, where they at present remain. Eight or more of these are very equal in size, and from recent admeasurement are found to be

In height—18 and a half feet
Circumference—1 foot from the ground, 8 inch.
Do. 4 feet from the ground, 7 inch.

They are planted in rather open ground and stand 25 or 30 feet each from any other trees, and consequently have not been drawn up unnaturally by the influence of the light. They have enjoyed the advantage of being regularly watered and of having the soil occasionally loosened about their roots.

Besides these plants, Mr. Dyke received from the same source in 1846, a quantity of seed, from which were raised some hundreds of young plants, which he endeavoured to distribute about the Province through the respectable natives who visited the Cutchery. Some of them were taken by natives and about a dozen were planted out at Mulletivo; but the greater part were left, and died on his hands. Those that were planted out, are now from 3 to 5 feet high. We are told that the trees, when once established, appear to do well without being watered, and from the little observation we have made of a few trees growing in the Mission Premises, at Manepy, we think they thrive remarkably well without attention.

It will be interesting to know how many years are required to mature the tree growing in Ceylon, and what *quality* of *timber* may be here produced from it. We see no reason why it should not thrive here as well as in Bengal. The supply of timber from the Jack tree is every year becoming more scanty, though the fruit of the tree affords compensation to the natives for its cultivation, and as the demand for cabinet articles is likely to increase, it appears to be a question deserving of the attention of speculators, whether some of their uncultivated grounds might not profitably be occupied in the production of the Mahogany tree for Cabinet and other uses.

---

### CAPITAL PUNISHMENT.

"The intense desire which now actuates a portion of the community to get rid of capital punishment even for murder, may be taken as an indication of the excessive sensibility which weeps over the criminal, and has no tears to spare for the miseries he has caused—which transforms the felon into an object of interest and sympathy, and forgets the innocent sufferers from his cruelty or perfidy. The propriety of that punishment in the given case would certainly appear to be distinctly sanctioned by that Book to which its opponents professedly appeal; by reason; and by the all but universal practice of all nations. It is the only certain guarantee which society can have for the security of its members. Supposing, indeed, these arguments only plausibly answered, it seems to us of little consequence whether capital punishment for this crime be abolished or not; for if murders were to become more frequent it would assuredly be instantly re-enacted. It is quite certain that even the most fanatical benevolence would prefer the death of the murderer to that of the unoffending members of society. Life is very precious, even to the most tender hearted-sentimentalist; and though he may think that some increase of less heinous offences might be compensated by the abolition of *capital punishment*, it is hard to suppose that he would deliberately prefer the death of many innocent to that of a few guilty."—*Edinburgh Review*.

---

### THE WORM'S DEATH SONG.

[BY FRANCIS KEY, ESQ.]

Oh, let me alone—I've a work to be done,
  That can brook not a moment's delay;
While yet I breathe, I must spin and weave,
  And may rest not, night or day.

Food and sleep I will never know
  Till my blessed work be done;
Then my rest shall be sweet in the winding-sheet
  That around me I have spun.

I have been a base and grovelling thing;
  And the dust of earth my home;
But I know that the end of my woe
  And the day of my bliss has come.

In the shroud I make, this creeping frame
  Shall peacefully die away;
But its death shall be new life to me,
  In the midst of its perished clay.

I shall wake! I shall wake! a glorious form
  Of brightness and beauty to wear;—
I shall burst from the gloom of my open'ng tomb
  And breathe in the balmy air!

I shall spread my new wings to the fanning air!
  On the summer's breath I'll live;
I'll breathe me where, in the dewy air;
  The flowers their sweetness give.

I will not touch the dusty earth—
  I'll spring to the brightening sky;
And, free as the breeze, wherever I please
  On joyous wing I'll fly.

And wherever I go, timid mortals may know
  That they from the tomb shall rise;
To the dead shall be given, by signal from Heaven,
  A new life and new home from the skies.

Then let them, like me, make ready their shrouds,
  Nor shrink from the mortal strife;
And like me they shall sing, as to Heaven they spring,
  "*Death is not the end of life*."

---

### NATIONAL MORALITY.

"Claiming as full an exemption from superstitions as most men I firmly believe and take pleasure in announcing it, that no State can prosper in a long career of true glory in the disregard of the claims of justice and the injunctions of the Christian religion. A flood tide of apparent prosperity may come, filling for a time the avenues of trade, and satiating the cravings of taste and curiosity; yet sooner or later it has its ebb, and either cloys with its abundance or leaves the void greater than before. History is a silent but eloquent witness of its truth, and from her undying lamp sheds a stream of unceasing light along our pathway. The fabrics of ancient greatness, built by injustice and consecrated to ambition, are now flitting shadows before us, starting up behind the broken pillars and falling columns, that were reared to perpetuate the genius by which they were wrought.—*Gov. Brown*.

---

#### PAPAL SUPERSTITIONS IN BELGIUM.

To give you an idea of the grovelling superstitions which prevail still in the lower classes of Belgium, I will say that mass is celebrated, not only for the healing of men, but *beasts*. Thus, when a peasant has a horse, a cow, a pig sick, he goes to the priest, and gives him twenty cents, requesting him to say mass for the poor animal! In a village near Brussels, a solemn mass is said every year, in behalf of horses affected with any disease, and these quadrupeds themselves attend the ceremony! they are devoutly drawn up at the church door, while the priest offers the sacrifice for them! *Ab uno disce omnes*. This example is enough to show how deeply enslaved are the Belgians to the priests.—*French Correspondent of the N. Y. Obs.*

---

#### POPERY THE RUIN OF IRELAND.

